CC 324-18

05.04.2022

அசா.1 குபம எண் 5740/2021 ன் கீழ் மறுபடியும் அழைக்கப்பட்டு 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

**PW1 - ராமசந்திரன் த/பெ. ஆறுச்சாமி**

நான் எனது முதல்விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள சங்கதிகளை தான் எனது போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 6 வரை எனது உறவினர்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கும் போது அவர்களது பெயர் விவரம் கூறினேன் என்றால் சரிதான். நான் எனது முதல்விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள சங்கதிகள் என்னுடன் பயணித்த விஜய் என்பவருக்கும் தெரியும். நாங்கள் இவ்வழக்கு விபத்தில் இறந்தவர் சென்று கொண்டிருந்த வாகனத்திற்கு சுமார் 25 மீட்டர் பின்னால் வந்து கொண்டிருந்தபோது டமார் என்ற சத்தம் கேட்டதால் சென்று பார்த்தோம். அப்போது பால்வண்டி அப்செட் ஆகி விழுந்தது என்றால் சரிதான். இவ்வழக்கு விபத்தில் குற்றம் சாட்டப்பட்டவருக்கும் அவருடைய வாகனத்திற்கும் காயமும் சேதாரமும் முறையே ஏற்பட்டது என்றால் சரிதான். நான் போலிசாருடன் சேர்ந்து தான் அவரை முதன்முறையாக மருத்துவமனை சென்று பார்த்தேன் என்றால் சரிதான். நான் அதசாஆ.1 புகாரை நான் எழுதி தான் கொண்டு வந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் அதசாஆ 1 புகாரில் தேதி எதும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு விபத்து நடந்ததாக சொல்லப்படும் பொள்ளாச்சி - பல்லடம் சாலை எனக்கு நன்கு பரிச்சையம் ஆனது என்றால் சரிதான். அது இருவழி சாலை என்றால் சரிதான். ஆலம்பாளையம் பிரிவில் இருந்து சிறிது தூரம் மேற்படி சாலை குறுகலாக தான் செல்லும் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் பகுதி மேட்டுப் பகுதி என்றால் சரிதான். குற்றம் சாட்டப்பட்டவர் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சரியான தனது தடத்தில் தான் வாகனம் ஓட்டி சென்று கொண்டிருந்தார் என்றாலும் எதிர் திசையில் வந்த இவ்வழக்கு விபத்தில் இறந்தவர்தான் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து வலது புறம் ஏறிவந்து குற்றம் சாட்டப்பட்டவர் வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி அதன் காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர் வாகனம் கவிழ்ந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கும் காயம் ஏற்பட்டது என்றாலும் குற்றம் சாட்டப்பட்டவருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், இவ்வழக்கில் இறந்தவர் எனது உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**றுவிசாரணை இல்லை.**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

CC 324-18

05.04.2022

அசா.1 குபம எண் 5740/2021 ன் கீழ் மறுபடியும் அழைக்கப்பட்டு 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

PW1 - ஆனந்தன் த/பெ. ஆறுச்சாமி

இவ்வழக்கில் விபத்தில் இறந்தவருக்கு வாகனம் ஓட்டவதற்கான ஓட்டுனர் உரிமமும் என்றாலும், வாகன காப்பீட்டு சான்று இல்லை என்றாலும் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-க.செல்லையா,பிஏ.,பிஎல்
நீதித்துறை நடுவர் எண்.2
பொள்ளாச்சி.

CC 324-18

05.04.2022

அசா.1 குபம எண் 5740/2021 ன் கீழ் மறுபடியும் அழைக்கப்பட்டு 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

PW1 - ஆனந்தன் த/பெ. ஆறுச்சாமி

இவ்வழக்கில் விபத்தில் இறந்தவருக்கு வாகனம் ஓட்டவதற்கான ஓட்டுனர் உரிமமும் என்றாலும், வாகன காப்பீட்டு சான்று இல்லை என்றாலும் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-க.செல்லையா,பிஏ.,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2

பொள்ளாச்சி.